பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
10 12 2025 12 40
புதன்கிழமை நண்பகல்
ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. மனித உரிமைகளை பாதுகாப்பது மட்டுமின்றி அதை கொண்டாடும் நாடாகவும் இந்தியா திகழ்கிறது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

2. சுதந்திரப் போராட்ட வீரரும், முன்னாள் உள்துறை அமைச்சருமான ராஜாஜியின் பிறந்த நாளையொட்டி, குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.

3. அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேலும் ஆயிரத்து 300 ரயில் நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும் என்று ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

4. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 33 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

5. ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – Aaryan Sapiah இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

மனித உரிமைகளை பாதுகாப்பது மட்டுமின்றி அதை கொண்டாடும் நாடாகவும் இந்தியா திகழ்கிறது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

மனித உரிமைகள் தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெற்ற விழாவில் பேசிய அவர், ஒவ்வொருவருக்கான மதிப்பும் எவ்வித பேதமும் இன்றி உறுதி செய்யப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

தனிமனித உரிமைகள் எவ்விதத்திலும் மறுக்கப்படக் கூடாது என்றும் அவர் தெரிவித்தார்.

சமத்துவமும், இரக்க மனப்பான்மையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

நீதி ஒவ்வொருவரின் பிறப்புரிமை என்பதை இந்தியா உறுதி செய்துள்ளதாகவும் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பிரதமரின் முதன்மை செயலர் திரு பி கே மிஸ்ரா, மக்கள் நலனுக்கான அரசு நிர்வாகம் நாட்டில் திறம்பட செயல்பட்டு வருவதாகவும் ஒவ்வொரு குடிமகனின் மாண்பும் காக்கப்படுவதாகவும் கூறினார்.

அரசமைப்புகள் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட்டு மக்களுக்கான மதிப்பை உறுதி செய்வதாக அவர் தெரிவித்தார்.

தகுதியுள்ள குடிமக்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்கான பயனை பெற வேண்டும் என்ற உறுதியான நோக்கில் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு நாட்டின் கடைகோடியில் உள்ளவர்களுக்கும் அரசின் திட்டப் பயன்கள் சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு பி கே மிஸ்ரா குறிப்பிட்டார்.

>><><><><><<

சுதந்திரப் போராட்ட வீரரும், முன்னாள் உள்துறை அமைச்சருமான ராஜாஜியின் பிறந்த நாளையொட்டி, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தியில், தேர்ந்த அறிவாற்றலுடன் நாட்டுக்காக பாடுபட்டவர் ராஜாஜி என்றும், தலைசிறந்த சுதந்திரப்போராட்ட வீரராகவும், சுதந்திர இந்தியாவின் மேன்மைக்காகவும் பாடுபட்டவர் என்றும் கூறியுள்ளார்.

பொதுவாழ்வில் தூய்மையை கடைபிடித்தவர் என்றும், ஜனநாயக மாண்புகளை உறுதி செய்தவர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு வழிகாட்டியாக திகழ்ந்தவர் என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில் தலைசிறந்த சுதந்திரப் போராட்ட வீரராகவும், சிந்தனையாளராகவும், தேசப்பற்று மிக்கவராகவும் விளங்கியவர் ராஜகோபாலாச்சாரி என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த சிந்தனையாளராக அவர் விளங்கினார் என்றும், மனித மாண்புகளுக்கு மதிப்பளித்தவர் என்றும் அவர் கூறியுள்ளார்.

நாட்டிற்கு அவர் அளித்த பங்களிப்பை என்றும் நினைவுகூர்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

>><><><><><<

அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் 120 ரயில் நிலையங்கள் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மக்களவையில் கேள்வி நேரத்தின்போது இதைத் தெரிவித்த ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ், அம்ரித் பாரத் திட்டத்தின்கீழ் மேலும் ஆயிரத்து 300 ரயில் நிலையங்களை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ரயில் நிலையங்களில் பயணிகளுக்கான வசதியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பயணிகள் தங்குவதற்கான அறை, வாகன நிறுத்தம், ரயில் நிலையத்திற்கு சிரமமின்றி செல்லும் வசதி போன்றவை ஏற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

பயணியரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்படுவதாகவும் திரு அஸ்வினி வைஷ்ணவ் குறிப்பிட்டார்.

>><><><><<

தேர்தல் ஆணையம் உட்பட அனைத்து அரசியல் சாசன அமைப்புகளும் வெளிப்படைத்தன்மையுடன் செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக தேர்தல் ஆணையத்தின் மீது காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி தெரிவித்த கருத்துக்களை நிராகரிப்பதாக கூறினார்.

மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி செய்தியாளர்களிடம் பேசுகையில் தேர்தல் ஆணையத்தின்மீது தவறான குற்றச்சாட்டுக்களை திரு ராகுல் காந்தி முன்வைப்பதாக குற்றம்சாட்டினார்.

அண்மையில் பீகார் மாநிலத்தில் காங்கிரசுக்கு கிடைத்த தோல்வியை ஒப்புக் கொள்ளாமல் அக்கட்சியினர் வாக்குப்பதிவு இயந்திரம் மீது குறை கூறுவதாக திரு பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.

>><><><><<

தமிழகத்தைச் சேர்ந்த 33 மீனவர்களை இலங்கை அரசு விடுவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 3 ஆம் தேதி இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட இந்த மீனவர்களை விடுவிக்க அங்குள்ள இந்திய தூதரகம் மேற்கொண்ட முயற்சியின் பயனாக அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கோட்டைப்பட்டினம், ராமேஸ்வரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மீனவர்களுக்கு இந்திய தூதரகத்தின் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு இந்தியா வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

>><><><><<

அஇஅதிமுகவின் பொதுக்குழு மற்றும் செயற்குழுக் கூட்டம் தற்போது சென்னையில் நடைபெற்று வருகிறது.

2026 சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான கூட்டணியில் முதலமைச்சர் வேட்பாளராக கட்சியின் பொதுச் செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி இருப்பார் என்று அந்த கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒருமித்த கருத்துடைய கட்சிகளுடன் இணைந்து தேர்தலை எதிர்கொள்வது என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

>><><><><<

அஸ்ஸாம் இயக்கத்தின் Swahid தினம் இன்று கொண்டாடப்படுவதை யொட்டி அம்மாநில மக்களுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், நாட்டின் வரலாற்றில் அஸ்ஸாம் இயக்கம் முக்கிய இடத்தில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த இயக்கத்தில் பங்கு பெற்ற தலைவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற இந்தியா உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அஸ்ஸாம் மாநிலத்தின் கலாச்சாரம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியில் மத்திய அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>><><><><<

தெற்கு கோவாவில் பட்டாசு உள்ளிட்ட வெடிப்பொருட்களை பயன்படுத்துவது, தீ மற்றும் புகையை ஏற்படுத்தும் பொருட்களை உபயோகிப்பது போன்றவற்றுக்கு மாவட்ட ஆட்சியர் தடைவிதித்துள்ளார்.

சுற்றுலாப் பயணிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதை தடுக்கும் நோக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரவு நேர விடுதிகள், உணவகங்கள், பயணியர் விடுதிகள் உள்ளிட்ட அனைத்து பகுதிகளிலும் வெடிபொருட்கள் தயாரிப்பு மற்றும் பயன்பாட்டிற்கு தடை விதித்து அவர் உத்தரவிட்டுள்ளார்.

வடக்கு கோவா பகுதியில் அண்மையில் இரவுநேர விடுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் 25 பேர் உயிரிழந்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

>><><><><<

அமெரிக்க உச்சநீதிமன்றம் வரி விதிப்பு தொடர்பான தமது அதிகாரத்தை கட்டுப்படுத்துவது தேசப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்குவதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் புதிதாக கொண்டு வரப்பட்டுள்ள வரிகள் குறித்து அந்நாட்டு உச்சநீதிமன்றம் ஆய்வு செய்து வரும் நிலையில் அதிபர் இந்த கருத்தை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கும் பாதுகாப்புக்கும் வரி மூலம் கிடைக்கும் தொகை அரசுக்கு அத்தியாவசிய தேவையாக உள்ளது என்றும் திரு டிரம்ப் கூறியுள்ளார்.

>><><><><<

யுனெஸ்கோவில் கலாச்சார விழாக்கள் பட்டியலில் தீபாவளி பண்டிகை சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் வெளிப்படுத்தும் முக்கிய விழாவாக தீபாவளி இருப்பதை கருத்தில் கொண்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

>><><><><<

யுக்ரைன் நிலப்பகுதியை எக்காரணம் கொண்டும் ரஷ்யாவுக்கு விட்டுத்தர முடியாது என்று அந்நாட்டு அதிபர் திரு Volodymyr Zelenskyy தெரிவித்துள்ளார்.

யுக்ரைன் நிலப்பகுதியை விட்டுத் தருவது குறித்து அமெரிக்க அதிபர் திரு டொனால்ட் டிரம்ப் வலியுறுத்தி வரும் நிலையில் திரு ஜெலன்ஸ்கி ஐரோப்பிய பயணம் மேற்கொண்டு இருப்பது முக்கியத்துவம் பெறுகிறது.

இத்தாலி பிரதமர் திருமதி ஜார்ஜியா மெலோனியை சந்தித்து யுக்ரைன் பாதுகாப்பு குறித்து அவர் பேச்சு நடத்தியுள்ளார்.

ரோம்நகரில் போப் 14 ஆம் லியோவையும் திரு Volodymyr Zelenskyy நேரில் சந்தித்து நாட்டின் அமைதிக்கான விஷயம் குறித்து ஆலோசனை நடத்தினார்.

முன்னதாக திரு Zelenskyy லண்டன் நகரில், பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி ஆகிய நாடுகளின் தலைவர்களை சந்தித்து யுக்ரைன் நாட்டு அரசை வலுப்படுத்துவது குறித்தும் விவாதித்தார்.

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஒடிசா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் அஸ்வினி பொன்னப்பா – Aaryan Sapiah இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

கலப்பு இரட்டையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-15, 21-16 என்ற செட்கணக்கில் இந்தியாவின் விமல்ராஜ் அண்ணாதுரை-ஸ்ரேயா பாலாஜி இணையை வென்றது.

----------------------

உலகக்கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியின் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா இன்று அர்ஜென்டினாவை எதிர்கொள்கிறது.

சென்னையில் இப்போட்டி மாலை *5.30* மணிக்கு நடைபெறுகிறது

*>> End of News <<*